உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

தஞ்சைமாநகரம்

வடக்குவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற

வாலசுப்பிரமணியர்

பதிகமும், இரட்டைமணிமாலையும்,

தோத்திரக்கண்ணிகளும்.

இவை

ஸ்ரீசுயம்பிரகாசசுவாமிகள் பரம்பரையில் திருவையாற்றில்

எழுந்தருளிய

சிவானந்தசுவாமிகள் மாணாக்கருளொருவராகிய

தஞ்சைமாநகரம்

கரந்தையம்பதியிலிருக்கும்

ந. வீரபத்திரபிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு,

மேற்படியூர்-கோட்டைக்குள் மாஜெஜியப்பாவீதி

வயித்தியலிங்கபிள்ளையவர்கள் குமாரர்

சாமிநாதபிள்ளையவர்களால்

தஞ்சைமாநகரம்-சதாவதானம்

சுப்பிரமணியஐயரவர்களது

சென்னை

வித்தியாரத்நி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதிஸ்ரு ஆவணிமீ

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

———*———

தஞ்சைமாநகரம் சதாவதானம்

ம-ரா-ரா-ஸ்ரீ,

சுப்பிரமணிய ஐயரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஏர்மலியுந் தஞ்சைநக ருத்தரவா யிலிற்கலக
லெட்டெட்டுந் தேர்ந்
தோர்மலிய வுறைவால சுப்ரமணி யப்புலவ
ரெண்டாட் கன்பின்
வார்மலியும்பதிகமொன்றே டிரட்டைமணிமாலையொன்றும்
வனைந்தான் கல்வி
ஈர்மலியும் வீரபத்ர னதனையச்சிட் டனன்சாமி
நாதவேளே.

திரிசிரபுரம்-மகாவித்துவான்

ம-ரா-ரா-ஸ்ரீ-மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

மாணாக்கருளொருவரும்,

தஞ்சைமாநகரம் கோட்டைக்குள் வடக்குவீதியி லிருக்கின்ற

மிஷியோன் காலேஜ் தமிழ்த்தலைமைப்பண்டிதருமாகிய

ம - ரா - ரா - ஸ்ரீ

மு. ஐயாச்சுவாமிபிள்ளையவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்மிகுதஞ்சை நகர்வடபாலிற்
சிறந்திமைமுருகத்தேவின்
பேர்மிகுபுகழைப் பவப்பிணிதொலையப்
பெரியர்தம்மூளத்திருகண்போல்

எர்மிகுமிரட்டை மணிமாலையொன்று
மிதமிகும்பதிகமதொன்றும்
நார்மிகவியற்றி நாட்டினன்புலவர்
நாவுறைவீரபத்திரனே.

திருமலைராயன்பட்டினம்
ம-ள-ள-ஸ்ரீ
சோமசுந்தரப்புலவர் இயற்றிய
கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமேவுநிலமக ளுரத்தணிமதாணியிற்
பொலிதருஞ் சோழநாட்டிற்
பொருவிலாவவ்வணியி னடுமணிநிகர்த்தமார்
பொன்னுலகும் வெள்கவிலகும்

மாமேவுதஞ்சைமா நகரிலுத்தரவாயின்
மருவிவள ரறுமுகத்து
வாலசுப்பிரமணிய சிலகுருமணியிரு
மலர்த்தாளில் வீழுமாறு

தூமேவுபதிகமொ டிரட்டைமணிமாலையுயர்
தோலிலணி பெறவணிந்தான்
துகளகலுநதிகுலாம் புதியிலெழுதினம்மணி
துலங்குபக் தசிரோமணி

தேமேவுமுத்தமிழ்ப் புலவர்கண்மணிமெய்ம்மை
திகழ்வீர பத்திரப்பேர்ச்
செல்வமணியென்றுலகு புகழ்சாந்தமணியாய
செப்பருஞ் சீர்த்தியனரோ.

சிறப்புப்பாயிரம்.

தஞ்சைமாநகரம் வடக்குவீதி

எஸ். பீ. ஜீ. ஸ்கூல் தமிழ் உபாத்தியாயர்

ம - ரா - ரா - ஸ்ரீ

இராமய்யாவவ்தாது அவர்களியற்றிய

நேரிசைவெண்பா.

சீர்பெருகுந்தஞ்சைச் சிவசுப்ரமண்ணியற்குப்
பார்புகழும்வீரபத்ரப் பாவலவன்—ஏர்பெறவே
பாமாலைசூட்டினன் பல்லுயிர்கள்கண்டுய்ந்து
போமாறுகாட்டினன் போந்து.

திருவையாறு

சிவானந்தசுவாமிகள் மாணாக்கருளொருவராகிய

கருவூரைச்சார்ந்த நல்லமாகாளிப்பட்டி

ம - ரா - ரா - ஸ்ரீ

சு. தெய்வசிகாமணிக்குருக்களவர்களியற்றிய

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்மருவுமருணகிரி நாதரொடுநக்கீர
தேவர்முதலடியார்க்கெலாஞ்
சித்திதந்தெழில்வள்ளி தெய்வகுஞ்சரிமலர்ச்
செங்கைவேலொடுமஞ்ஞையூர்ந்
தோர்மருவுதஞ்சைவாழ் வாலசுப்பிரமணிய
னீராறுதோள்விம்முற
வின்சுவைகனிந்தொழுகு தண்டமிழ்ப்பனிகமோ
டிரட்டைமணிமாலைதம்மை

வார்மருவுசிற்சுயம் பிரகாசதேசிகன்
மரபில்வந்தையாற்றிடை
மன்னுஞ்சிவாநந்த நாதனுமெந்தையருள்
வாய்மைபெற்றுயர்திண்ணியன்
பார்மருவுசற்சனர்கள் புகழ்வீரபத்திரப்
பாவலனணிந்தனனிதைப்
பரிவுடன்சாமிநா தக்குரிசிலச்சிற்
பதித்துநிறைவேற்றினனரோ.

தஞ்சைமாநகரம் கரந்தையம்பதியிலிருக்கின்ற
முன்சிபால் ஸ்கூல் ஹெட்மாஸ்டர்
ம-ரா-ரா-ஸ்ரீ
நாராயணசுவாமி ஐயரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்ததஞ்சையில்வாழ் வாலசுப்பிரமணியன்
றிருத்தாட்கன்போ
டேர்பூத்தபுலவர்புகழ் வீரபத்திரனெனும்பே
ரிசைந்தபூமான்
ஆர்பூத்தபதிகமுட னிரட்டைமணிமாலையினை
யணிந்தானிஃதை
வார்பூத்தபுகழ்ச்சாமி நாதவேளச்சியற்றி
மகிழ்ந்தான்மன்னே.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

தஞ்சைமாநகரம் வடக்குவாயில்

வாலசுப்பிரமணியர் பதிகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

நன்னயஞ்சேர் தஞ்சை நகர்வடக்கு வாயிலின்கண்
மன்னியுறை வாலசுப்ர மண்யனடிக்—குன்னியொரு
நற்பதிகஞ் செப்பவெழி லல்வா யொருகோட்டுக்
கற்பகவி நாயகன்றாள் காப்பு.

ஆசிரியவிருத்தம்.

பூமேவு மாமகுட மணிமேவு முடியும்வெண்
பொட்டிமேவு பிரபைநுதலும்
புகழ்மேவு தொண்டருக் கிதமேவ வருளுமற்
புதமேவு சுடர்விழிகளுங்
காமேவு மலர்முகமு மெழின்மேவு கவுரியின்
கனதனப் பாலுண்டசெங்
கனிவாயு மணிமாலை யணிமேவு தோள்களுங்
கனகநாட் டிமையவர்க்குத்
தூமேவு மபயங் கொடுத்தருள் கரங்களுந்
துகின்மேவி வளர்மருங்குந்
துதிமேவு பொற்சிலம் பொலிமேவு தாள்களுந்
தோன்றவந் தருள்புரிகுவாய்

மாமேவு மெழில்வளஞ் சேர்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (க)

சரவண பவாகுகா குமரகுரு தேசிகா
சண்முகா மயில்வாகனு
சாமிநா தாசிலம் பாகுக்ட கேதனு
தாருகற் செற்றவீரா
கருணைவர தாவள்ளி தெய்வயா னைக்கினிய
காவலா தமிழ்நாவலா
கந்தா பகீரதியின் மைந்தா கடம்பா
கஜானனற் கிளையகுழகா
விரவுதண் டாயுதா வும்பர்சே னுதிபா
வித்தகா கார்த்திகேயா
மெய்யா விரண்டாறு கையா வெனத்தினமும்
வேண்டியுன் புகழ்படிக்கும்
வரமெனக் கருள்செய்தி யுயர்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (உ)

கறைமிடற் றண்ணலா லுஞ்செகுத் தற்கரிய
கலிமேவு மவுணர்குழுவைக்
கடிதுவே றறவொழித் துயர்வானு ளோருளங்
களிகொளச் செய்யவிலையோ
முறைசொலித் துதிசெய்த வருணகிரி நாதர்க்கு
முதுஞான மருளவிலையோ

முனிபய மகற்றுநன் னக்கீர தேவர்க்கு
முன்னர்வந் துதவவிலையோ
அறைதரும் பலசித்தி முத்திகளு மன்பருக்
கருள்செய்து காக்கவிலையோ
அவனிமிசை யெளியேனை யாதரித் தின்பஅலை
யருளுவ துனக்கருமையோ
மறையோர் கணம்பரவு முயர்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (ரு)

சோரு முலகினிற் முயிலாச் சேயெனச்
சிறுவனே லேலமிட்டுச்
செப்புமொழி யின்றுனது பன்னிரு செவிக்கணேர்
செவியினுங் கேட்கவிலையோ
ஈராறு விழியிலோர் விழியேனு நீதிறந்
தென்முகம் பார்க்கொணுதோ
இருவினைக ளுள்ளவா றெய்துமெனி னின்னும
மெண்ணுவோர்க் கின்னலுளதோ
ஏராரு மெய்வாழ் வெனக்கருளி னின்னடிய
ரீயத்த காதென்பரோ
இலகுபரி பூரண வருட்கானி யெய்துமோ
வேழையேற் குண்மையுரையாய்
வாராரு மணியரண் சூழ்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (க)

அம்புயத் தம்பகனு மாரணத் திறையோனு
மடிமுடிக டேடவரிதாம்
ஐம்முகத் தண்ணலுக் கோமொழிப் பொருளுண்மை
யருள்செய்த சாமிநீயென்

றிம்பரிடை நின்முகத் தென்மனக் குறையினை
யியம்பினே னீயிதற்கொன்
றேனுமிப் போதுதவி செய்திடா யாகிலினி
யெத்தே வினுக்கோ துவேன்

கும்பமுனி வற்குமெய்ஞ் ஞானமரு டேசிகா
கூடலம் பதியின்மருவிக்
கூட்டமுறு புலவோர்க டற்புகழ்ந் தேமாறு
கொண்டகல கந்தவிர்த்தோய்

வம்புறு மலர்ச்சோலை சூழ்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (நு)

கனகமுத லானமுக் காதலற் றென்றுநின்
கழலடி யுள்ளமுருகிக்
காயஞ்சி லிர்ப்பவிரு கண்ணருவி பாயமுக்
கனியமுது கண்டதேனின்

இனியமது ரச்சுவையி னூறிரத மலிதரு
மியற்றமிழெ னூலினின்சீர்
இசைமலர் தொடுத்தெழிற் பாமாலை நிற்கணிந்
தின்பமுற் றுர்களடியார்

அனவரத மிழிவான வங்காதி பிரபஞ்ச
வகிலபோ கப்பெளவமீ

தலைபடு துரும்பான நெஞ்சினே னின்னமல
வருளடைந் துய்வதெந்நாள்
வனசமலர் மலிவாவி சூழ்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (சு)

உண்மைமொழி யுரையாத பேதைநற் சிவகா
ருண்யமில் லாதபேதை
உணர்வாளர் நட்பைநித மருவாம லறிவீன
ருறவைமரு வுற்றபேதை
திண்மையுட னதிதலம் பதிசேவை செபதபஞ்
செய்யவெண் ணுதபேதை
செய்யமறை நூலுணர்ந் தந்நெறியி னெஞ்சைச்
செலுத்தி நில்லாதபேதை
பெண்மண்பொ னென்னுமூ வாசைப் பிசாசம்
பிடித்துழலு கின்றபேதை
பேசுமிப் பேதையேற் குய்வழியு னருளலாற்
பேருலகில் வேறுமுளதோ
வண்மைநிறை புலவோர்க ளுறைதஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (எ)

பாடவோ நின்பெருமை மறையாக மங்களாற்
பகர்வதற் கெல்லையிலதாம்
பணியவோ நின்வடிவ மண்டபகி ரண்டப்
பரப்பினுக் கப்பாலதாம்

தேடவோ நின்னருளென் னேவகைப் பொறிபுலன்
சிந்தைக்கு மெட்டாததாஞ்
சிரவணு திகள்புரிந் தயர்வகன் றபரோட்ச
நின்மயாநந்தநிட்டை
கூடவோ வென்மன மனைக்கண நிலாதிச்சை
கொண்டுதிரி கின்றதந்தோ
குவலயத் துன்பாத நம்பினே னெனேயடிமை
கொள்ளுவது நின்பாரமே
மாடமா ளிகைசூழ் திருத்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (அ)

நின்னடியை யோர்போது நினேயாத வறிவீனர்
நெஞ்சகம் போலிருண்ட
நிறமேவு முருவோ டனற்பொறி யுகுக்குமிரு
நேத்திரத் தால்வெருட்டித்
துன்னுமொரு கையினிற் பாசமோர் கையிடைச்
சூலாயு தம்பிடித்துத்
துரிதமுடன் மேதிக் கடாவேறி யந்தகன்
றேன்றியென் முன்னர்வருமுன்
மின்னனைய நுண்ணிடைக் குறவள்ளி யுயர்தெய்வ
வேழமா தொடுமயூர
மீதேறி வந்தென்னை யாதரித் தருள்செய்தி
வெண்ணிலாக் கற்றைகான்று
மன்னுமணி முத்தநதி சூழ்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்

வாலயிற் கரமுருக மால்வற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (கூ)

எங்கணு மிலங்குநின் னருள்வடி வனைத்துமென
திருவிழிக ணேக்கிடவுநின்
இனியபுகழ் வாய்செவிகள் பாடவுங் கேட்கவுநி
னிருதாளை முடிசூடவும்
அங்கைநிறை மலரெடுத் துனதுபய வங்கிரியி
லர்ச்சனை மிகப்புரியவும்
அருளமுத முதவுநின் னுறைமுத் தினையுள்ள
மனுதினஞ் சிந்திக்கவுஞ்
சங்கமுறு நின்னடியர் தம்மோ டிணங்கவுந்
தமியனேற் கருள்புரிகுவாய்
தருணமா துமையுதவு கருணைவா ரிதியான
தற்பரா முப்போழ்தினும்
மங்கல முழாமுழங் குயர்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் கரமுருக மாலவற் கொருமருக
வாலசுப் பிரமணியனே. (கo)

ஆதிமுடி வற்றிலகு சோதிமணி யேசச்சி
தானந்த மோனமணியே
அங்கணுல கெங்கணுந் தங்குமணி யேயென்று
மன்னியமி லாதமணியே
வேதமணி யேசகல ஆதமணி யேமுத்தி
வித்தான சத்திமணியே
விந்தைமணி யேயடியர் சிந்தைமணி யேவெட்ட
வெளிகடந் தொளிருமணியே

போதமணி யேகுரு நீதமணி யேசிவ
போதருண ராதமணியே
புத்தமணி யேயென்ன நித்தமு நினைத்துதி
புரிந்துய்ய வருள்செய்குவாய்

மாதவத் தோர்புகழ் திருத்தஞ்சை மாநகர்
வடக்குவா யிற்கண்வாழும்
வாலயிற் காமுருக மாலவற் கொருமருக
வால்சுப் பிரமணியனே. (கக)

பதிகம் முற்றிற்று.

உ

சிவமயம்.

வாலசுப்பிரமணியர்

இரட்டைமணிமாலை.

காப்பு-நேரிசைவெண்பா.

மாமேவுந் தஞ்சை வடக்குவா யிற்கணுறை
தூமேவு நல்வால சுப்ரமண்யக்—கோமானுக்
கித்தலமீ தன்போ டிரட்டைமணி மாலைசொலற்
கத்திமுகன் முடிணையெற் காம்.

நூல்.

நேரிசைவெண்பா.

திருமருவு மெண்வகையாஞ் செல்வமுண்டா நல்ல
உருமருவு மெய்யருள்வாக் குண்டாம்—நிருபருறை
மங்கலஞ்சேர் தஞ்சைநகர் வாலசுப்ர மண்யன்பா
தங்களகஞ் சிந்தித் தவர்க்கு. (க)

கட்டளைக்கலித்துறை.

தவனஞ்சனித்தமு தப்பௌவநாப்பணிற் றங்குறுமா
தவனஞ்சவாகனன் விண்ணோர்முனிவர் தமக்கிடர்த்தந்
தவனஞ்சமுண்டவன் சேய்தஞ்சைவிண்குஞ் சரிமகிழுந்
தவனஞ்சலிப்பினை மாற்றுமன்னேன்கழற் சாருமினே. (உ)

மின்னுறையுந்தஞ்சைநகர் வேலாயுதனேநின்
மன்னுமுக மாறுமயில் வாகன்முந்—துன்னுபுகழ்ச்
சேணூர்க்குங் கிண்கிணிசேர் சேவடியுங் கண்ணூரக்
காணூர்க்கு முண்டோ கதி (ங)

கதிக்கண்ணலார்நல் வினையைகண்ணுதுல கப்பெருஞ்ச
கதிக்கண்ணழுந்தி யுழல்வேனையின்று கடைக்கணித்தாள்
கதிக்கண்ணவம்பர மாப்புனைந்தானருள் காதலம
கதிக்கண்ணலாமுனி முன்னேர்புகழ்தஞ்சைக் காவலனே. (சு)

காவலிலாப்பைங்கூழ்போற் காயமெடுத்துன்சரணே
மேவலிலா தென்னுயுள் வீண்போகா—தோவலிலெக்
காலமுமின்சீர்பாட்டக் கண்பார்சகம்புகழுங்
கோலமுறுந் தஞ்சைக் குகா. (டு)

காவனந்தங்குங் குறப்பாவையுள்ளங் களிக்குமுரு
காவனந்தங்குன்றி லுள்ளாயடியர் கருத்தினரு
காவனந்தங்கு நடையுமையின்றகு காவெனையுங்
காவனந்தங்குரு கூர்வயற்றஞ்சையெங் கந்தையனே. (கூ)

ஐயமெலாம்போக்கியறி வாநந்தத்துள்ளழுந்தி
வையமெலாம்பேய்த்தேர் வனமெனக்கண்—டெய்யும்
படிக்கருள்வாய்தஞ்சையுறை பாலகுமரானின்
அடிக்கமல மென்முடிவைத் தாங்கு. (எ)

குவலயமன்னரின் சீர்வேண்டிலனினைக் கூடிநிற்றற்
குவலயமன்னவென் னுள்ளங்குழையக் குறித்தருள்வா
குவலயமன்னந்த ரர்க்காயசுரர் குலமொழித்தோய்
குவலயமன்னந் தடத்துறுந்தஞ்சைக் குருபரனே. (அ)

பரமுனக்குத்தஞ்சையில்வாழ் பாலசுப்ரமண்யா
வரமெனக்குத்தந்தருள வையத்—திருவினைசேர்
அங்கமெடுத்துற்றதுவு ராற்றேனுனையுணர்வாற்
பங்கமறக்காணும் படி. (கூ)

படியந்தரங்கடந் தப்புறமீதும் பரவையிடைப்
படியந்தரங்கமொத் தோவாதுழலுமென் பாழ்மனந்தேம்
படியந்தரங்கணங் கார்பாற்செலாதுன் பதப்புகழைப்
படியந்தரங்க முரைசெய்திதஞ்சைப் பதிக்குகனே. (கo)

பதியனைத்தும் பாலனஞ்செய் பார்த்திபர்தஞ் சீருந்
திதியகன்று செல்வதனைத் தேர்ந்தும்—முதிர்தஞ்சைக்
கந்தவே ளம்பொற் கனைகழலே நெஞ்சேநீ
சிந்தியாதென்ன திரம். (கக)

திரக்காரங்கண்ட மறைத்தாங்கறிவைத் திரைசெயுஞ்சீர்
திரக்காரங்கண்டயர் வெய்துமென்னுள்ளிரு டூர்த்தருண்மு
திரக்காரங்கண்டமு தாய்த்தஞ்சைமேவிய சிற்பரக
திரக்காரங்கண்டத் தணிந்தோற்கருளயிற் சேவகனே. (கஉ)

சேவற்கொடியயில்வே றெய்வமாதங்கமெழிற்
பாவைக்குறமாதும் பக்கலுற—மேவுபுகழ்
விஞ்சுமயிலேறிவந்துன் மெய்க்காட்சியெற்கருள்வாய்
தஞ்சைநகர்மேவியகந் தா. (கங)

தாரத்தனத்தத்த னைக்காவலாக்கிச் சகத்திடையு
தாரத்தனத்தத்த னைநாணவீசொளிச் சத்தியையா
தாரத்தனத்தத்த கங்கொண்டுதஞ்சையிற் சார்ந்தசதி
தாரத்தனத்தத்த னைநெஞ்சமேகினை சந்ததமே. (கச)

சந்தத்தருமணம்விண் டாவுநெடுந்தண்டலைசூழ்
அந்தத்திருத்தஞ்சை யாறுமுகா—பந்தத்தின்
மீளாக்கிரகவலை மேவாமனின்மலர்த்தாட்
கானாக்கியென்றெனைவைப் பாய். (கடு)

வையம்பரம்புரை கண்ணினர்வன்னிகர் மாமணிக்கோ
வையம்பரம்புனை கொங்கையர்மாய மயக்கொழித்தாள்
வையம்பரம்புகு மாவைச்சிதைத்த வடியயிலாய்
வையம்பரம்பு புகழ்த்தஞ்சைவாழ்சுப்ர மண்ணியனே. (கசு)

மண்ணிடமும் விண்ணிடமும் மன்னுயிருக்கோருயிராய்
அண்ணியொளிர்போத வருட்கடலே—எண்ணரிய
நன்னிதிசேர்தஞ்சை நகர்வேலாநாயேற்குன்
சன்னிதியேநாடுசுகந் தா (கஎ)

கந்தாதரித்திரள் பண்பாடுநீபநற் கண்ணியமோ
கந்தாதரித்திணைக் கண்மருவர்தருள் கார்த்திகையு
கந்தாதரித்திடும் பாலுண்டதஞ்சைக் கதிர்வடிவேற்
கந்தாதரித்திட வைதாளையென்றலைக் கண்ணுறவே (கஅ)

கண்ணுறிரண்டிலகுங் கந்தனேயைந்தருவார்
விண்ணோர்புகழ்தஞ்சை வேலவனே—உண்ணுடும்
மெய்த்தவத்தோருள்ளமலர் மேவுமுருகோனேயென்
சித்தமயறீரத் திருத்து. (ககூ)

தீரச்செய்யாவுணை வன்பாயருங்குஞ் செகத்திலுறைந்
தீரச்செய்யாமையை வேண்டிடின்வேண்டுமின் றீயவினை
தீரச்செய்யாறு முகத்திறைவாழ்மலர்த் தேன்புனல்பாய்
தீரச்செய்யார்வளஞ் சேர்தஞ்சைவாசஞ் செயுந்திருவே. (உ0)

வாழி-வெண்பா.

மஞ்சுலவுந் தஞ்சைநகர் வாழ்கவடி யார்வாழ்க
விஞ்சுமயில் சேவலெழில் வேல்வாழ்க—கொஞ்சுகுற
வஞ்சிதெய்வ குஞ்சரியும் வாழ்கமுரு கன்றுளென்
நெஞ்சகத்துள் வாழ்க நிதம்.

இரட்டைமணிமாலை முற்றிற்று.

சிவமயம்.

வாலசுப்பிரமணியர்
தோத்திரக் கண்ணிகள்.

———o———

கந்தா குமரா கதிர்வேலா கார்த்திகையின்
மைந்தா முருகா மதுரு தனன்மருகா. (க)

வாலகும ரோசா மறவார்க் கதிநேசா
ஓலமிடு நான்மறையி னுட்பொருளாய் நின்றவனே. (உ)

தேனமுது கண்டிற் சிறந்தினிக்கும் தெள்ளமுதே
ஞானப் பெருவெளியே நாதாந்தப் பேரொளியே. (ங)

மன்னுமணிக் குள்ளொளியு மாமலரிற் கந்தமும்போல்
அன்னியமற் றென்னகத்து ளாடுஞ் சிகாமணியே. (ச)

நித்யபரி பூரணனே நின்மலனே யென்றுனையான்
பத்தியொடு நித்தநித்தம் பாடி மகிழ்வேனே. (ஞ)

ஒருமை மனதா யுனைநாடி நிற்பேனே
இருவினையின் சேடமகன் றேகாந்த மாவேனே. (ஃ)

கண்ணுடு மிவ்வுலகைக் கானனீர் போலுணர்ந்தே
உண்ணுடி யுன்னுருவை யுள்ளபடி காண்பேனே. (எ)

மூலப் பிரணவமாய் மூப்பாழுக் கப்பாலாய்
மேலுணர்வாய் நின்ற விகசிதத்தைப் பாரோனே. (அ)

வெம்பந்தத் தாழுமவர் மெய்வழிதோர்ந் துய்வடையச்
சம்பந்த ஞதிவந்த தண்ணருளைப் பாரோனே. (ஃ)

கரவணையுந் தானவரைக் காய்ந்தமரர்க் கின்புதவச்
சரவணையில் வந்துதித்த தற்சொரூபம் பாரோனே. (௪0)

பண்டை முறைமுழக்கப் பண்ணெனவே யொண்கனகத்
தண்டை சிலம்பொலிக்குந் தாண்மலரைப் பாரோனே. (௪௧)

உன்னு மடியா ருளங்களிக்க வூர்ந்துவரும்
வன்னக் கலாபமயில் வாகனத்தைப் பாரோனே. (௪௨)

சீர்பூத்த பட்டாடை சேர்மருங்கைப் பாரோனே
வார்பூத்த வீபமலர் மாலிகையைப் பாரோனே. (௪௩)

சிற்பிரபை வீசுமெழிற் செம்பொனணி பாரோனே
வற்பிலகு முப்புரிநூன் மார்பழகைப் பாரோனே. (௪௪)

வெஞ்சூர் தடிந்தவடி வேற்கரத்தைப் பாரோனே
கொஞ்சிவருஞ் சேவற் கொடியழகைப் பாரோனே. (௪௫)

கங்கைமுலைப் பாலுண் கனிவாயைப் பாரோனே
புங்கமணித் தோட்டணிந்த பூஞ்செவியைப் பாரோனே. (௪௬)

நேசமுறு மீராறு நேத்திரத்தைப் பாரோனே
தாசர்க் குகந்தருளுஞ் சாந்தமுகம் பாரோனே. (௪௭)

உம்பர்பயந் தீர்த்த வுயர்முகத்தைப் பாரோனே
கும்பமுனி யைத்தொழும்பு கொண்டமுகம் பாரோனே. (௪௮)

அருணகிரி நாதர்க் கருண்முகத்தைப் பாரோனே
கருணைவள்ளி தெய்வக் களிற்றின்முகம் பாரோனே. (௪௯)

ஆரணனு நாரணனு மாதியந்தங் காணரிய
பூரணனுக் குண்மையருள் போதமுகம் பாரோனே. (௫0)

தென்னூரு நெற்றித் திருநீற்றைப் பாரோனே
பொன்னூர் மணிமகுடப் பூமுடியைப் பாரோனே. (௫௧)

துட்டமலப் பித்தொழிந்து சுத்தநிலை பெற்றுயர்ந்த
சிட்டருட னென்னையுநீ சேர்த்துவைக்கப் பாரோனே. (22)

ஆணவப் பேயை யகற்றியுனைப் பாரோனே
வாணுதலார் மாமாய வாஞ்சையற்று நிற்பேனே. (23)

ஓங்குஞ் சடாக்ஷரத்தி னுண்மையுணர்ந் துய்வேனே
பூங்கமலன் பால்மருவாப் போதநிலை சார்வேனே. (24)

கனவாக வெச்செயலுங் காணுநா ளெய்தாதோ
நனவிற் சுழுத்தியினை நண்ணுநா ளெய்தாதோ, (25)

பாவத் துவக்காசா பாசமெனக் கோயாதோ
சீவத் துவமொழிந்த சித்தியெனக் கெய்தாதோ. (26)

இனமனைநீத் தேகாந்த மெய்துநா ளெந்நாளோ
மனமகிழ்ச்சி யோடுனையான் வாழ்த்துநா ளெந்நாளோ. (27)

தீயவஞ் ஞானவிரு ளோர்க்குந் தினகரனே
மாயப் பவப்பிணியை மாற்று மருமருந்தே. (28)

நேசர்மனக் கோயிலிடை நின்றிலங்கு மெய்த்தேவே
பேசரிய வின்பப் பெருங்கருணை வாரிதியே. (29)

மன்னர்புகழ் தஞ்சை வடக்குவா யிற்கணைழில்
மன்னியொளிர் வாலசுப்ர மண்யகுரு மாமணியே. (30)

இவ்வேளை யென்குறைதீர்த் தின்புதவி யாண்டருள்வாய்
செவ்வேள் குகனேநின் செங்கமலத் தாள்போற்றி. (31)

தோத்திரக்கண்ணிகள் முற்றிற்று.